# தந்திட்ட பொருட்கள் யாவையும் எடுத்து

தந்திட்ட பொருட்கள் யாவையும் எடுத்து
தந்தோம் தந்தாய் ஏற்றிடுவாய் - ( 2 )

**1**
வழங்கிட கனியோ உணவோ இன்றி
வாடிடும் வறியோர் பலர் இறைவா-வெறும்
விழிநீர் வியர்வை வேதனை அன்றி
வேறேதும் இல்லா நிலை இறைவா

**2**
உனக்கென என்னை வழங்கிடும் வேளை
உன்னருள் இவர்க்காய் கேட்கின்றோம்
எங்கள் மனம் பொருள் ஆற்றல்
அனைத்தையும் இவர்தம்
மனத்துயர் நீங்க படைக்கின்றோம்.